1978 மார்ச் 13]

இராமநாதபுரம் மாவட்டத்தில் பேருந்து வழித்தடங்கள்

*545 வினா—திரு. ர. ஜெபமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முகவை மாவட்டத்தில் அரசாங்க பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த தடங்களை ரத்து செய்து விட்டு தனியார் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கி இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) மம்சாபுரத்திலிருந்து கடல்குடி வரை சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து வழித் தடத்தை 8—5—1973 அன்று பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஏற்றுக் கொண்டது. மேற்கூறிய ஊர்களில் பேருந்துகளை பழுது பார்ப்பதற்கான வசதிகள் இல்லாத காரணத்தினால் மேற்படி வழித்தடத்தின் அனுமதியை திருப்பி ஒப்புவித்துவிட்டு சில மாற்றங்கள் செய்து இராஜபாளையத்திலிருந்து மம்சாபுரம் வழியாக நாகலாபுரம் வரை பேருந்து விடுவதற்கான அனுமதியை கோரினர். பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. போக்குவரத்துக் கழகமும் 1—5—1974 முதல் 20—9—1977 வரை தற்காலிக அனுமதியின் பேரில் பேருந்து ஒன்றினை இயக்கி வந்தனர். தற்காலிக அனுமதியை மாற்றி முறைப் படுத்துவதற்கான விண்ணப்பங்கள் 1939-ம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கோரப் பட்டன. அவ்வாறு வந்த விண்ணப்பங்களில் சாத்தூரைச் சேர்ந்த ஸ்ரீனிவாசா டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த தனிப்பட்ட உரிமையாளர் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைவிட அதிக மதிப்பெண்கள் பெற்றதினால், இராமநாதபுர மாவட்டப் போக்குவரத்து அதிகாரி மேற்கூறிய தனி உரிமையாளருக்கு மேற்படி வழித் தடத்தில் பேருந்து விடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த அனுமதியின் பேரில் 20—9—1977 முதல் மேற்கூறிய தனியாரின் பேருந்து ஒன்று மேற்படி வழித் தடத்தில் இயங்கி வருகிறது. மாவட்டப் போக்குவரத்து அதிகாரியின் முடிவினை எதிர்த்து பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மாநில போக்குவரத்து மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் (State Transport Appellate Tribunal) வழக்கு ஒன்றினை தொடர்ந்துள்ளது. இவ்வழக்கு தீர்ப் பாயத்தின் ஆய்வில் உள்ளது.

[முற்பகல் 9-40].

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் அமைச்சர்களுக்கு நினைவுபடுத்தவேண்டியது என் கடமை.

'Questions requiring long statements or statistics shall not be starred.'

அதனால் அதிகமாக இருந்தால் அச்சடித்து டேபிள்மீது வைத்து விடலாம். அப்போது துணைக் கேள்விகள் கேட்க சுலபமாயிருக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளில் உள்ள கிராமங்களில் பஸ்கள் இல்லை என்ற குறையைப் போக்க மினிபஸ்கள் விடுவதற்கு ஒரு திட்டமிருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மினிபஸ் விடுகிற திட்டம் தற்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் மதுரையில் நிலக்கோட்டை தாலுகாவில் அமல்படுத்தப்பட்டுள்ளது. தனியார் துறை மூலம் வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு தாலுகாக்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து, ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த முறையை அமல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : அரசு போக்கு வரத்துக் கழகங்கள் மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதோடு வருமானமும் மக்களுக்குத்தான் கிடைக்கிறது. மார்க் என்ற அடிப்படையில் மோட்டார் ஆய்வாளர்கள் பணிமனை இருக்க வேண்டும் என்று ஒரு கண்டிஷன் போடுகிறார்கள், அதற்கு தனியாக ஒரு மார்க் கிடைக்கிறது. மார்க்ஸ் அதிகம் கிடைக்க சிலருக்கு சில அதிகாரிகள் உதவிசெய்கிறார்கள். அவர்களும் மார்க் வாங்குகிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? பணிமனை இருக்கவேண்டும் என்ற ஒரு கண்டிஷன் இருக்கிறது. ஆகவே அங்கு பணிமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மார்க்ஸ் என்ற நிலைமை மோட்டார் வாகனச் சட்டத்தின் விதிகளில் இருந்துவருகிறது. அதன்படி நடைமுறையில் இருந்துவருகிறது. ஆனால் பாண்டியன் போக்குவரத்து கழகம் அந்தக் குறிப்பிட்ட பகுதியில் பணிமனை ஒன்றை விரைவில் நிறுவி இந்தக்குறையைப் போக்க ஏற்பாடு செய்துவருகிறது.

திரு. எம். எம், ஏ. ரசாக் : புதிதாக மினிபஸ் விடுகிறபோது பஸ்களுக்காக சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு கடன் கொடுக்க அரசு முன்வருமா ?

1978 மார்ச் 13]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மினிபஸ் போன்ற பேருந்துகளை விடுபவர்கள் பொதுவாக வசதிபடைத்தவர்களாக இருக்கிற காரணத்தால் அந்த முறையை அரசு நடைமுறைக்குக் கொண்டுவராது. இருந்தபோதிலும், டெக்னோக்ராட்ஸ்' என்று சொல்லப்படுகிற பொறியியல் துறை வல்லுனர்களாக இருக்கிற படித்த வேலையில்லாமலிருக்கிற பட்டதாரிகள் முன் வருகிறபோது அவர்களுக்கு இந்த உதவியைச் செய்ய நாட்டுடமை யாக்கப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரை செய்ய அரசு சிந்தித்து வருகிறது.

திரு. து. ராமசாமி : மினி பஸ் விடுகிற திட்டத்தை கோவை மாவட்டத்திற்கு விஸ்தரிக்க அரசாங்கத்திடம் திட்டம் உண்டா? நடப்பாண்டில் அது விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ் விடுகின்ற விஷயத்தில் தற்போது, தென் ஆற்காடு மாவட்டத்திலும், செங்கை மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் மட்டுமே அரசு இந்த மினி பஸ் விடுகின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, தனியார் துறைக்கு லைசென்ஸ் வழங்குகிற கேள்வியையொட்டிய கேள்வி இது. இன்று தனியார் துறையில் இருக்கும் நிறுவனங்களையும் பஸ்களையும் அரசே வெகு விரைவில் எடுத்துக்கொள்ளும் என்பது தான் அரசின் கொள்கையா அல்லது இப்போதுள்ள முறையே நீடித்துக் கொண்டிருக்குமா என்பதைப்பற்றி ஆலோசித்து, வெகுவிரைவில் எல்லா பேருந்துகளும் அரசு எடுத்துக்கொள்வது பற்றிய கொள்கையை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கொள்கை அளவிலும், நடைமுறையிலும் தனியார் துறையிலும் இருக்கின்ற பேருந்து களை படிப்படியாக அரசு நாட்டுடமையாக்கி வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை. கலியமூர்த்தி : இந்த மினி பஸ்கள் விடுவதில் தனிப்பட்டவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அரசே அதை ஏற்று நடத்த முன்வருவார்களா? மேலும் மார்க் சிஸ்டத்தைப் பற்றி கூறினார்கள். இந்த மார்க் சிஸ்டத்தை மாற்றும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மினி பஸ் விடுவதில் நஷ்டம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். மினி பஸ்கள் விடுவது என்பது கிராமப்புற

மக்கள் பயன்பெறவேண்டும் என்ற கருத்தில், கிராம மக்களின் நலனைக் கருதி, சிறிய பேருந்துகளை, நகர்புறங்களோடு கிராமப் புறங்களோடு இணைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு மினி பஸ் கள் விடுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதற்காகத்தான் இதற்கு 50 ரூபாய் டாக்ஸ் என்று நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. ஆகவே இதில் நஷ்டம் வராது என்று நம்புகிறேன்.

(திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் எழுந்திருந்தார்....)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முகவை மாவட்டத்தை பற்றியது. ஆகவே தொடர்புடைய கேள்வியாக கேளுங்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்த மினி பஸ்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் விடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். அதனால்தான் நான் கேள்வி கேட்க முன்வந்தேன் என்பதை தலைவர் அவர்களுக்கு முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு வட்டங்களில் இந்த மினி பஸ்கள் விட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இது போதாது, மேலும் பல தாலூகாக்களில் இது தேவைப்படுகிறது, டிமாண்ட் அதிகமாக இருக்கிறது. இதை அனுமதித்தால், நமக்கும் வருமானம் வரும், மக்களுக்கும் வசதி யாக இருக்கும். ஆகவே இதை விஸ்தரிப்பதற்கு அரசு முன் வருமா? அரசாங்கத்திற்கும் இதனால் நன்மை உண்டாகும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு வட்டங்களில் இப்போது நடைமுறையில் இருந்து வருகிறதாயினும், ஏனைய இடங் களுக்கு இந்த மினி பஸ் விடுவது பற்றி ஆய்வு நடந்து வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ஓ. சுப்பிரமணியம் அவர்கள் எழுந்திருந்தார்......)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு கட்சிக்கும் சந் தர்ப்பம் கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் எல்லோருக்கும் கொடுக்க நேரம் இருக்காது. சில நேரங்களில் தவறியும் இருக்கலாம். அடுத்த கேள்வி............

பால்வள நிறுவன ஊழியர்களது ஊதியங்கள்.

546. வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுகு விடை யளிப்பாரா—

(அ) தமிழ் நாடு பால்வள கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கு வேலைத் தன்மை அடிப்படையில் புதிய ஊதிய விகிதம் நிர்ண யிக்கும்படி அரசுக்கு, மதுரை பால்பண்ணை ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா?